செ.வெ.எண்:72/2016 நாள்:26.08.2016

# பத்திரிக்கைச் செய்தி

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (26.08.2016) உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் முன்னிலையிலும் பொது விநியோகத் திட்டம் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வில் பொது விநியோகத் திட்டம் தொடர்பாக முழுக்கணினி மயமாக்கல் அனைத்து பொருட்கள் பற்றி ஆணையாளரால் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது. சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் விற்பனை இயந்திரம் பொருத்தப்பட்டது தொடர்பான பணி முன்னேற்ற விவரம் பற்றி விவாதிக்கப்பட்டது. வரும் செப்டம்பர் முதல் ஆணையர் அலுவலகம் மூலம் அனைத்து கடைகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுவது மற்றும் பொதுமக்களிடம் ஆதார் எண் சேகரிப்பது மற்றும் அலைபேசி எண் கட்டாயம் பெற வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. வரும் ஜனவரி'2017 ஆம் ஆண்டு முதல் Smart card வழங்கப்பட உள்ளதால் ஆதார் எண் வழங்கிட வேண்டும் என்பதை பொதுமக்களுக்கு வலியுறுத்தி அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டது. Smart Card System- பொதுமக்கள் வசதிக்காகவே ஏற்படுத்தப்படுகிறது. எனவே, இப்பணிக்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டது. மேலும் பொது விநியோகத் திட்டம் தொடர்பாக பல்வேறு பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர், தனி வட்டாட்சியர்கள் (கு.பொ), அனைத்து வட்ட வழங்கல் அலுவலர்கள், அனைத்து கூட்டுறவு சார் பதிவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.